**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.461/2021
Sessions)

( Prosecution P.W.8
Deposition of witness for (Defence
(Court

| Name | சேதுராமு | -- | |
|---|---|---|---|
| Husband's Name | சுந்தரப்ப நாயக்கர் | Calling | இல்லத்தரசி |
| Village | பிள்ளையார் நத்தம் | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 70 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 19th day of January 2026.

**Accused Present.**

**முதல் விசாரணை**

நான் திருவில்லிபுத்தூர் தாலுகா, பிள்ளையார் நத்தத்தில் குடியிருந்து வருகிறேன். சுமார் 13 ஆண்டுகளுக்கு முன்பு எனது கணவர் இறந்து போய் விட்டார். எங்களுக்கு வீர பொம்மு என்ற மகனும், லதா, சுந்தரி, சிங்கார செல்வி ஆகிய மூன்று மகள்களும் இருக்கிறார்கள். சிங்கார செல்வி மற்றும் எனது மகன் வீர பொம்முக்கு மட்டும் திருமணம் ஆகவில்லை மற்றவர்களுக்கு திருமணம் ஆகிவிட்டது. எனது மகன் வீர பொம்மு விவசாயம் செய்து வந்தார். எனது மருமகன் முருகன் என்பவரது காட்டிற்கு வேலைக்கு சென்று வருவார். எனது மகன் வீரபொம்மு வழக்கமாக காலை 05.00 மணிக்கு நடைபயிற்சி மேற்கொள்வார். 21.01.2021ம் தேதி காலை சுமார் 05.45 மணியளவில் ஒரு கார் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், எங்கள் ஊரில் கடை வைத்திருக்கும் ஒரு நபர் அதை பார்த்துவிட்டு எனது மருமகன் முருகனிடமும், எனது மகளிடமும் போன் மூலமாக தகவல் தெரிவித்தார். அந்த விபரத்தை அவர்கள் என்னிடம் கூறியவுடன் நானும், எங்களது ஊர்க்காரர்களும் விபத்து நடைபெற்ற இடத்திற்கு சென்றோம். எனது மகன் இறந்த நிலையில் காணப்பட்டார். ஆம்புலன்ஸ் மூலம் எனது மகனின் பிரேதத்தை திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். இது சம்மந்தமாக நாங்கள் புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்துபோன வீர பொம்மு என்னுடைய மகன் ஆவார். நான் முதல் விசாரணையில் சொன்ன விசயங்கள் என்னுடைய மருமகன் சொல்லித்தான் தெரியும். இறந்து போனவர் என்னுடைய மகன் என்பதால் என் மருமகன் கூறியதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 19th day of January 2026.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN Digitally signed by M VEERANAN Date: 2026.01.19 16:41:01 +0530

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**